<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 642/2023**</u>

<u>**வழக்கு சாட்சி PW-6**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | மெக்கானிக் |
| கிராமம் | : | அருணகிரிபுரம் | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 30th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் அருணகிரிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 03.12.2022ம் தேதி, மதியம் 01.00 மணிக்கு முருகையா வீட்டுபக்கம் வந்து போலீசார் ரஞ்சினி, அவரது தங்கையை பூராஜ் வெட்டியதை சம்பந்தமாக போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் சம்பவத்தை பார்க்கவில்லை. நானும், மணிகண்டனும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இன்றைய தினம் என்னை சுரேஷ் என்பவர் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். அவர் கலாச்செல்வி சொல்லி அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. எதிரியின் குடும்பத்திற்கும், எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் பண்டாரச்சாமியின் உறவினர் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தபோது, சம்பவயிடத்தில்

இருக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், அ.சா.1ன் குடும்பத்தினருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்பதும், அவர்களுக்கு உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்பதும் எனக்கு தெரியும். ஊரில் எல்லோருக்கும் இந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். இது சம்பந்தமாக இருவருக்குமிடையில் பிரச்சனை நடந்து பலதடவை காவல்நிலையம் சென்று பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் தான் முருகையா முன்பு வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். முருகையா குடியிருந்த வீட்டில் கரண்ட், தண்ணீர் வசதி இருந்தது என்றால் சரிதான். நான் உள்ளூரில் வேலை பார்த்து வருகிறேன். சம்பவம் நடந்த மதியம் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எந்த கையெழுத்து செய்யவில்லை என்றாலும், நான் புகார்தாரருக்கு உறவினர் என்பதினால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். டைப் அடித்து பிரிண்ட் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 16:53:49 +0530